34

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விமாணி பட்டப்படிப்பு(இயற்கை விஞ்ஞானம்)

மட்டம் 05 - இறுதிப்பரீட்சை 2008

**ESU 3114 – வழிகாட்டலும், ஆலோசனை கூறலும்**

**காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்**

திகதி. 02.09.2008 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

பகுதி I இலிருந்து சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. தற்போதைய "ஆலோசனை கூறல் செயன்முறை" விருத்திசார் செயன்முறையென விபரிக்கப்படுவது ஏன் என்பதை சுருக்கமாக விளக்குக.

2. ஆலோசனை கூறல் கொள்கைக்கான அணுகுமுறைகள் ஐந்தினைப் பெயரிடுக.

3. தனியாள் ஒருவர் எதிர்நோக்கும் உள பிரச்சனை பகுத்தறிவுவாத அணுகுமுறையில் எவ்வாறு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது என்பதை சுருக்கமாக விபரிக்க.

4. பொருத்தப்பாடுடைய ஆளுமையினைக் கட்டியெழுப்புவதிலுள்ள தடைகள் மூன்றைக் குறிப்பிட்டு அதில் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக.

5. ஆலோசனை கூறல் சேவையிற்கான ஒழுக்கக்கோவை இருப்பதன் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக ஆராய்க.

6. 'எலிகின்ஸ்பேர்க்' ன் கொள்கைக்கு அமைய தொழில் தெரிவு செயன்முறையின் பிரதான சந்தர்ப்பங்கள் மூன்றைப் பெயரிடுக.

7. மத்திய மயப்படுத்தப்பட்ட பாடசாலை வழிகாட்டல், ஆலோசனைகூறல் சேவையின் அனுகூலங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

8. பிள்ளைகளுக்கிடையில் நாசகார நடத்தைகள் ஏற்படுவதில் தாக்கம் செலுத்தும் பாடசாலை தொடர்பான காரணிகள் ஐந்தைப் பட்டியற்படுத்துக.

(05 × 08 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9. (i) வழிகாட்டல் எண்ணக்கரு, ஆலோசனை எண்ணக்கரு வரை எவ்வாறு விரிவடைந்துள்ளது என்பதனை விளக்குக. (10 புள்ளிகள்)

   (ii) ஆலோசனை கூறல் செயன்முறை வழிகாட்டல் செயன்முறையிலும் பார்க்க மிகவும் பரந்ததும் விஞ்ஞான பூர்வமானதுமென கருதப்படுகின்றது ஏன் என்பதனை விளக்குக. (10 புள்ளிகள்)

10. (i) ஆலோசனை கூறல் தொடர்பாக சிக்மன் பிரெய்ட் முன்வைத்த உளப்பகுப்பாய்வுக் கொள்கையினை சுருக்கமாக தருக (05 புள்ளிகள்)

(ii) உணர்வற்ற(unconsiousness) பிள்ளைகளின் காரணிகள் பொருத்தப்பாடான ஆளுமையில் எவ்வாறு தாக்கம் செலுத்தப்படுகின்றது என்பதனை உதாரணங்கள் 3இன் அடிப்படையில் பகுப்பாய்வு செய்க. (08 புள்ளிகள்)

(iii) பிள்ளைகளில் எதிரான உணர்வற்ற காரணிகளை இழிவளவாக்கிக் கொள்வதற்குப் பெற்றோர் அல்லது ஆசிரியர் எவ்வாறு செயல்படவேண்டும் என்பதனை விளக்குக. (07 புள்ளிகள்)

11. "தன்னை யாரும் கவனிப்பதில்லை எனும் உளப்பாங்கு உடையவர்களை உற்சாகப்படுத்துவது விசேடமாக அவசியமாகும்".

மேலுள்ள கூற்றினை விமர்சனரீதியாகப் பகுப்பாய்வு செய்க. (20 புள்ளிகள்)

12. (i) கற்றல் தொடர்பாக பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் ஐந்தைப் பட்டியற்படுத்துக.

(ii) அப்பிரச்சனைகளின் பின்னணிக்கான காரணங்கள் யாது? (07 புள்ளிகள்)

(iii) மேலே காட்டிய பட்டியலில் ஒரு பிரச்சினையைத் தெரிவுசெய்து அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பிள்ளைக்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள் என்பதைப் பகுப்பாய்வு செய்க. (08 புள்ளிகள்)

13. "கல்வி, வேலை உலகுக்கு இடையில் உள்ள பொருத்தமின்மையை(mismatch) நீக்குவதற்கு பாடசாலையில் தொழில், ஆலோசனை சேவை இருத்தல் அவசியமாகும்."

மேற்கூறிய கூற்றினை விமர்சன ரீதியாகப் பரிசீலிக்க. (20 புள்ளிகள்)

14. பின்வரும் தலைப்புக்களில் யாதாயினும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) வரிசை அளவிடை(Rating scales).
(ii) உளவியல் கற்கை நிறுவனம்.
(iii) அல்பேட் எலிஸ்.
(iv) இடைநிலை பாடசாலை மாணவர்களின் ஆலோசனை கூறலின் தேவை

(10 × 2 = 20 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)